**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண். 21 /2024   நாள் : 13.08.2025

வா.சா:–1 சிவக்குமார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்):–

தாவா மாதிரி வரைபடம் தாவா பிராதுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. தாவா மாதிரி வரைபடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். தாவா மாதிரி வரைபடத்தில் ரீ.சர்வே. எண். 13 மற்றும் 14 ல் கிழபுற எல்லையில் ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் மேற்கு புற எல்லையில் ரீ.ச.எண்.11/3 மற்றும் 11/4 ல் ஆக்கிரமிப்பை நான் தான் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் சரிதான். என் பூமிக்கு வருவதற்கு தார் ரோடில் இருந்து கிழக்கு நோக்கி வரும் தடத்தில் வேலுசாமியின் நிலவியல் வண்டிப்பாதை ரீ.ச.எண்.13/3 ல் இருந்து தெற்கு நோக்கி திரும்பி ரீ.ச.எண்.11/3, 11/4, 78/1, 80/1 மற்றும் 81/1 இன் வழியாகத்தான் நிலவியல் வண்டிப்பாதை செல்கிறது என்றால் சரிதான். அதிலிருந்து தெற்கு நோக்கி சென்று கிழக்கு நோக்கி மூர்த்திபாளையம் மெயின் ரோட்டிற்கு செல்கிறது என்றால் சரிதான். அவரவர் தோட்டத்திற்கு முன்னால் உள்ள பாதையில் அவர்கள் சென்று வருகிறார்கள். ரீ.ச.எண்.78/1, 80/1, 81/1 ஆகிய பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலவியல் வண்டிப்பாதை அவரவர் பூமியை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். இந்த நிலவியல் வண்டிப்பாதை வழியாகத்தான் நானும் பிரதிவாதிகளும் சென்று வருகிறோம் என்றால் ஆமாம். எங்கள் பூமி வரை சென்று வருகிறேன். எனது பூமியை தாண்டி தான் பிரதிவாதிகள் பூமி உள்ளது என்றால் சரிதான். எனது நிலத்தின் வழியாக செல்லும் ரீ.ச.எண்.11/3 மற்றும் 11/4 ல் பிரதிவாதிகள் நடந்து செல்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் ஆட்சேபணை உள்ளது அதில் தான் பிரதிவாதிகள் சென்று வருகிறார்கள். நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு இருந்தே மேற்படி நிலவியல் வண்டிப்பாதை வழியாகத்தான் பிரதிவாதிகள் சென்று வருகிறார்கள் என்றால் ஆமாம். குறுகிய நாட்களாகத்தான் சென்று வருகிறார்கள். இந்த தடத்தின் வழியாகத்தான் காலம் காலமாக பிரதிவாதிகள் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. ரீ.ச.எண். 11/3

P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.08.13 18:18:30 +0200

மற்றும் 11/4 ல் பிரதிவாதிகள் பூமிகளுக்கு எத்தனை பைப் லைன் செல்கிறது என்றால் 1 பைப் லைன் செல்கிறது. 1 பைப் லைன் எப்போது போடப்பட்டது என்றால் நான் காடு வாங்குவதற்கு முன்பு போடப்பட்டதாக பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி சொன்னார். இது வரையிலும் எத்தனை பைப் லைன் போகிறது என்று உறுதியாக சொல்லமுடியுமா என்றால் 2 லைன் உள்ளது. என்னை கேட்டுத்தான் போட்டார்கள். எந்த வருடம் என்றால் நான் காடு வாங்கிய 2009 ம் வருடம். பைப் லைன் போடும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. என்ன வகையான பைப் லைன் போட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. பாதையில் கான்க்ரீட் பைப் லைன் ஒன்றும் பி.வி.சி. பைப் லைன் ஒன்றும் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி பைப் லைன் மூன்றும் வி.ஆர்.பெரியசாமி கிரயம் பெற்ற பழனிசாமி காலத்திலேயே போடப்பட்டது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக 2009 ம் வருடம் தான் பைப் லைன் போடப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பைப் லைன் எடுக்கசொல்லியோ நிலவியல் வண்டிப்பாதையை பிரதிவாதிகள் பயன்படுத்துவதை தடுக்கவோ பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். இந்த ஆக்கிரமிப்பு எடுக்க சொல்லித்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்நிலையில் நான் தான் ஆக்கிரமிப்பு செய்ததாக ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பிறகும் நான் இந்த வழக்கை வாபஸ் பெறவில்லை என்றால் நான் வாபஸ் பெற வேண்டிய அவசியமில்லை. ஆக்கிரமிப்பு பகுதியில் 9 தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். நிலவியல் வண்டிப்பாதை என்பது அரசுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. எனது பட்டா நிலத்தில் உள்ளது. பட்டா நிலத்தில் நிலவியல் வண்டிப்பாதை இருந்தால் அடிநிலம் மட்டுமே எனக்கு உரிமை என்றாலும் வண்டிப்பாதையை என்னவாக உள்ளதோ அவ்வாறுதான் நான் பயன்படுத்த முடியும் என்று சொன்னால் சரியல்ல. வேலுசாமியின் நிலவியல் வண்டிப்பாதை வழியாக தெற்கு நோக்கி திரும்பும் வழியில் 2 அடி விட்டமுள்ள கான்க்ரீட் பைப் அமைத்து பாலம் அமைத்துள்ளார் என்றால் சரிதான். என் பூமியில் செல்லும் நிலவியல் வண்டிப்பாதைக்கு கிழபுறம் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 100 அடி நீளம் கருங்கல் கட்டடம் கட்டி தொண்டுபட்டி அமைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கட்டிடம்

P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.08.13 18:18:38 +0200

## Copy of Deposition

100 வருடங்களுக்கு முன்பே கட்டப்பட்டதால் நான் வழக்கு மூலத்தில் கூறுவது போல் ஆக்கிரமிப்பு செய்திருக்க இயலாது என்றால் சரியல்ல. அ.வ.எண். 146/2011 என்ற வழக்கை பிரதிவாதிகள் ஒரு வேலுசாமி மீது ரீ.ச.எண். 13/3, 11/3, 11/4, 78/1 80/1 ,81/1 பூமியில் நிலவியல் வண்டிப்பாதை செல்வதற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரித்தாக்கல் செய்தார்கள் என்றாலும் மேற்படி வழக்கு இந்த பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் பழைய க.ச.எண்.219 என்றால் தெரியாது. அதற்கு தென்புறம் உள்ள பூமி பழைய க.ச.எண். 222 பி என்றால் தெரியாது. 14.06.2017 ம் தேதி நான் கம்பி வேலி போட முயற்சி செய்ததாகவும் அதை பிரதிவாதிகள் தடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. தடுத்தார்கள். தாவா பி அட்டவணை சொத்தை யார் விலைக்கு கேட்டார் என்றால் 1 ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி கேட்டார். நான் கொடுக்க முடியாது என்று கூறினேன். பிரதிவாதிகள் ரீ.ச.எண்.10, 12, 79, 80 கொடுமுடி கிராமத்தில் உள்ள காலைகளில் அவர் முன்னோர் காலத்திலிருந்தே அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. ரீ.ச.எண். 11/3, 11/4 வழியாகத்தான் சென்று வருகிறார்கள் என்றால் இல்லை. தாவா வண்டித்தடத்தை விட்டால் பிரதிவாதிகளுக்கு வண்டி வாகனம் கொண்டு செல்ல வேறு தடம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் பிரதிவாதிகளுக்கு தாவா வண்டிப்பாதை நீடனுபோக வசதி உரிமை அடிப்படையிலும் அவசியத்திற்கான வசதி உரிமை அடிப்படையிலும் பயன்படுத்த உரிமை உண்டு என்று சொன்னால் சரியல்ல. தாவா பி செட்யூல் வண்டிப்பாதை வழியாகத்தான் பிரதிவாதிகள் சென்று வந்து கொண்டும் பைப் லைன் பதித்து தண்ணீர் எடுத்து சென்று அவரவர் பூமிக்கு காலம் காலமாக பயன்படுத்திவருகிறார்கள் என்றால் இல்லை. நான் பின்னிட்டு கிரயம் பெற்றிருப்பதால் தாவா பி அட்டவணை சொத்தை பயன்படுத்துவதை பொறுத்து பிரதிவாதிகளை நான் கட்டுப்படுத்த இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் பிரதிவாதிகளுக்கோ அவரது முன்னோர்களுக்கோ தாவா பி அட்டவணை பாதையில் பைப் லைன் போட்டுக்கொள்ள அனுமதியும் கொடுக்கவில்லை என்றாலம் பிரதிவாதிகளோ அவரது முன்னோர்களோ பைப் லைனை எடுக்க

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.08.13 18:18:44 +0200

# Copy of Deposition

ஏற்றுதலோ(Undertaking) வழங்கவில்லை என்றால் சரியல்ல. கம்பி வேலி போட்டதை பிரதிவாதிகள் தடுத்தது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்தார்கள் என்று என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அப்போது கொடுமுடி டி.மு.நீதிமன்றத்தில் அ.வ.எண்.146/2011 ல் பிரதிவாதியான வேலுசாமியின் தூண்டுதல் பேரில் தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கோர எனக்கு அருகதை இல்லை என்றாலும் இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI — Digitally signed by P SRIDEVI Date: 2025.08.13 18:18:50 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |